உ

புதுச்சேரி அரசு

இந்து சமய நிறுவனங்கள் துறை

ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்

திருநள்ளாறு

எண்: நி.அ(கோ)/ஸ்ரீதசுதே/திரு/ப.சா-1/2026/ 656. தேதி: 06.11.2026

ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான திருக்கோவிலின் பயன்பாட்டிற்காக கீழ்கண்ட விபரப்படி காய்கறிகள் / பொருட்களை வழங்க புதுவை அரசின் Trade Licence பெற்ற வியாபார நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த காலம் : 01.12.2026 முதல் 30.11.2027 வரை

ஒப்பந்தபுள்ளி சமர்பிக்க கடைசி தேதி, நேரம் : 23.11.2026 மாலை 4.00 மணி

ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் தேதி , நேரம் : 23.11.2026 மாலை 4.30 மணி

டேவணித்தொகை : **ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)**

வ. எண்	காய்கறிகள் / பொருட்கள் விபரம்	உத்தேசமாக தேவைப்படும் காய்கறிகள் / பொருட்கள் விபரம்			தொகை ரூபாய்	
		கிலோ	கட்டு	எண்ணிக்கை	ரூபாய்	பைசா
1	சின்ன வெங்காயம்	200				
2	பெரிய வெங்காயம்	1200				
3	பச்சை மிளகாய்	100				
4	இஞ்சி	120				
5	தக்காளிபழம்	1000				
6	உருளை கிழங்கு	1500				
7	சக்கரவள்ளி கிழங்கு	200				
8	கருணை கிழங்கு	100				
9	காராகருணை கிழங்கு	100				
10	சேமை கிழங்கு	200				
11	பீட்ரூட்	1500				
12	கேரட்	700				
13	முள்ளங்கி (வெள்ளை)	600				
14	முள்ளங்கி (ரோஸ்)	600				
15	முட்டைகோஸ்	1500				
16	காளிபிளவர்	50				
17	கத்தரிக்காய்	1000				
18	வெண்டைக்காய்	500				
19	கொத்தவரங்காய்	500				
20	அவரைக்காய்	500				
21	பீன்ஸ்	500				
22	முருங்கைக்காய்	750				
23	புடலங்காய்	1000				
24	பீர்க்கங்காய்	100				
25	பரங்கிக்காய்	500				
26	பூசணிக்காய்	500				
27	சுரைக்காய்	500				
28	சவ்சவ்	500				
29	பாகற்காய்	100				

வ. எண்	காய்கறிகள் / பொருட்கள் விபரம்	உத்தேசமாக தேவைப்படும் காய்கறிகள் / பொருட்கள் விபரம்			தொகை ரூபாய்	
		கிலோ	கட்டு	எண்ணிக்கை	ரூபாய்	பைசா
30	கருவேப்பிலை	50				
31	பொதினாகீரை	100				
32	கொத்தமல்லிதழை	150				
33	சிறுகிழங்கு	200				
34	பச்சை பட்டாணி	100				
35	மாங்காய் - ஒட்டுரகம்	1000				
36	நூல்கோல்	50				
37	மொந்தன் வாழைக்காய்	500				
38	கிடாரங்காய்	100				
39	நார்த்தங்காய்	100				
40	பச்சை பட்டாணி காய்	20				
41	எலுமிச்சை பழம்	50				
42	வெள்ளரிக்காய்	2				
43	முளைக்கீரை - 250 கிராம் கொண்டது (1 கட்டு)		300			
44	மணத்தக்காளிகீரை - 250 கிராம் கொண்டது (1 கட்டு)		100			
45	மஞ்சள் கொத்து உயரம் 90 செ.மீ குறையாமல் (1-க்கு)			1000		
46	இஞ்சி கொத்து உயரம் 50 செ.மீ குறையாமல் (1-க்கு)			1000		
47	பொங்கல் கரும்பு உயரம் 2 மீட்டர், சுற்றளவு 30 செ.மீ குறையாமல் (1-க்கு)			100		
48	தார் & பூ-வுடன் கூடிய பூவன் வாழை மரம் 7 அடி உயரம் குறையாமல் (1-க்கு)			100		
49	வாழைகன்று உயரம் 90 செ.மீ குறையாமல் (1-க்கு)			200		
50	பலாபழம் 5 கிலோ குறையாமல் (1-க்கு)			100		
51	பம்ளிமாஸ் 1 கிலோ குறையாமல் (1-க்கு)			100		
52	தென்னை குருத்து தோரணம் (1-க்கு)			2000		
53	நுனிவாழை இலை நீளம் 60 செ.மீ, அகலம் 40 செ.மீ குறையாமல் (1-க்கு)			40,000		
54	வாழை இலை (சாப்பாட்டு ஏடு) - நீளம் 60 செ.மீ, அகலம் 30 செ.மீ குறையாமல் (1-க்கு)			40,000		
55	வாழை இலை (டிபன் ஏடு) - நீளம் 30 செ.மீ, அகலம் 30 செ.மீ குறையாமல் (1-க்கு)			10,000		
56	தேங்காய் '12"சுற்றளவு இருக்க வேண்டும்			1,000		

ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள்:

1. ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள விருப்ப முள்ளவர்கள் டேவணித்தொகையாக ஒப்பந்தபுள்ளியுடன் **ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)**-த்திற்கான வங்கி வரைவோலை, நிர்வாக அதிகாரி, ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு என்ற பெயரில் எடுத்து இணைக்கப்பட வேண்டும்.
2. நடப்பில் உள்ள Trade Licence நகல் இணைக்கப்பட வேண்டும்.
3. டேவணித்தொகைக்கான வரைவோலை மற்றும் நடப்பில் உள்ள Trade Licence நகல் இணைக்கப்படாத ஒப்பந்தபுள்ளிகள் நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்ததாரரே தங்கள் பொறுப்பு மற்றும் செலவில் தேவஸ்தான நிர்வாகம் கோரும் பொருட்களை அவ்வப்போது வழங்கப்படும் INDENT அடிப்படையில் தேவஸ்தான வளாகத்தில் வழங்க வேண்டும். பொருட்களை பாதுகாக்கவோ , பொருட்களை வைக்கவோ எந்தவித இடமும் கொடுக்கப்படமாட்டாது.
5. மேற்கண்ட காய்கறிகள் / பொருட்கள் தரமானதாகவும் கொடுக்கப்பட்ட அளவுகளில் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். தரமற்ற காய்கறிகள் / பொருட்களாய் இருப்பின் அதற்கான தொகை கொடுக்கப்படமாட்டாது.
6. கொடுக்கப்படும் காய்கறிகள் / பொருட்களின் அளவு மற்றும் தரம் குறைந்து இருந்தால், பணி ஆணைக்கான உரிமம் ரத்து செய்யப்பட்டு, காப்பீட்டு தொகையான **ரூ.10,000/-**ஐ இழக்கநேரிடும்.
7. தேவஸ்தானத்தின் தேவைக்கு ஏற்ப 30% காய்கறிகள் / பொருட்கள் கூடுதலாக, தேவைப்படும் பட்சத்தில் அதை கொடுப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும். குறைவாக வாங்கும் பட்சத்தில் எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படமாட்டாது.
8. இக்கோவிலுக்கு எவ்வப்போது மேற்கண்ட காய்கறிகள் / பொருட்கள் தேவைப்படுகின்றதோ அவ்வப்போதெல்லாம் தடையில்லாமல் உடனுக்குடன் வழங்கிடல் வேண்டும்.
9. பெறப்பட்ட விலை புள்ளிகளில் எந்தெந்த ஒப்பந்ததாரர் எந்தெந்த குறைந்த விலை குறிப்பிட்டுள்ளாரோ அந்தந்த பொருட்களை அந்தந்த ஒப்பந்ததாரர் வழங்கிட ஆணை வழங்கப்படும்
10. ஒப்பந்தகாலத்தில் ஒரு மாதத்திற்காக வாங்கப்படும் காய்கறிகள் / பொருட்களுக்கான பட்டி (Bill) அடுத்த மாதம் 5-ஆம் தேதிக்குள் கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும்.
11. ஒப்பந்ததாரர் மேற்படி ஒப்பந்தகாலத்தில் ஏற்படும் எவ்வித இயற்கை இடர்பாடுகள் மற்றும் அரசு அறிவிக்கும் ஊரடங்கு போன்ற நடைமுறையால் ஏற்படும் நஷ்டத்திற்கு தேவஸ்தானம் பொறுப்பேற்காது. எந்தவித இழப்பீட்டு தொகையும் கோரமுடியாது மற்றும் எவ்வித ஒப்பந்தகால நீடிப்பும் வழங்கப்படமாட்டாது.
12. ஒப்பந்தபுள்ளிகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது ஓப்பந்தபுள்ளியை ஒத்திவைக்கவோ ஆலய நிர்வாக அதிகாரிக்கு முழு உரிமையுண்டு. அவரின் தீர்ப்பே இறுதியானது.

SRI DHARBARANYESWARA SWAMY DEVASTHANAM THIRUNALLAR

நிர்வாக அதிகாரி 10/11/20

1.Notice Board
(As per list enclosed)
2.Thirunallar Temple Website
(www.thirunallarutemple.org)